பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
16 12 2024 **MONDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை நாடாளுமன்றத்தின் மக்களவையில் இன்று மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் அறிமுகம் செய்கிறார்.
- இந்தியா வந்துள்ள இலங்கை அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்புகள், முதலீடுகள், பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமனுடன் பேச்சு நடத்தினார்.
- தென்கொரியாவின் இடைக்கால அதிபர் திரு. Han Duck - Soo நேற்று அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடனுடன், இருநாடுகளின் உறவுகளை வலுப்படுத்தும் விதத்திலான பேச்சுக்கள் தொலைபேசி வாயிலாக நடைபெற்றது.
- வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 445 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>><<<<<

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை நாடாளுமன்றத்தின் மக்களவையில் இன்று மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் அறிமுகம் செய்கிறார்.

இந்த மசோதா குறித்து முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழு தாக்கல் செய்த அறிக்கையை அடுத்து, இந்த மசோதா தற்போது நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்படுகிறது.

இதன்படி இரண்டு கட்டங்களாக தேர்தல்கள் நடைபெறும்.

முதலில் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் ஒரே நேரத்தில் நடத்தப்படும் என்றும், உள்ளாட்சி மற்றும் பஞ்சாயத்து தேர்தல்கள், பொதுத்தேர்தல் நடத்தப்பட்ட 100 நாட்களுக்குள் இந்த தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரசியல் சாசனம் குறித்த விவாதம் மாநிலங்களவையில் இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்த விவாதத்திற்கு நாளை, மாநிலங்களவையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பதில் அளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சிறிய நகரங்களிலும் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் விதத்தில், தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநிலங்களின் தலைமைச்செயலாளர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நிறைவடைந்த நான்காவது தேசிய தலைமைச் செயலாளர்களுக்கான மாநாட்டில் உரையாற்றிய அவர், பல்வேறு நடைமுறைகளை வலியுறுத்துவதால், மிகப் பெரிய இடையூறாக தொழில் முனைவோர்கள் நினைப்பதாகவும், இதனால் நடைமுறைகளை எளிமையாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அரசின் நிர்வாகத்தில் மக்களும் பங்கெடுக்கும் விதத்தில், மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றங்களையும் கொண்டு வரும் விதத்திலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

அரசின் பல்வேறு திட்டங்களை மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எரிசக்தி துறையில் மாட்டுச் சாணத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் எரிசக்தி திட்டம் பாராட்டுக்குரியது என்றும், இது சுழற்சி பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் பிரதமர் கூறினார்.

கழிவுகளிலிருந்து மீள் உற்பத்தி செய்யும் முறை ஊக்கவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மின்னணு கழிவுகளை கையாள்வதற்கு தேவையான நிதி ஆதாரங்களை கண்டடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் தற்போது உடல் பருமன் பிரச்சினை அதிகரித்திருப்பதாகவும் அதனை களையும் விதத்தில், உடல்திறன் இந்தியா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஆரோக்கியமான இந்தியா – வளர்ச்சியடைந்த இந்தியாவாக மாறும் என்றும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைத்து மாநில தலைமைச்செயலாளர்களும் ஒன்று கூடிய இந்தக் கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியா வந்துள்ள இலங்கை அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே, பிரதமர் திரு. நரேந்திர மோடியை இன்று புதுதில்லியில் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்துகிறார்.

மூன்று நாள் பயணமாக நேற்று புதுதில்லி வந்த அவரை, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வரவேற்றார்.

அதன் பின்னர், மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமரை சந்தித்துப் பேசிய இலங்கை அதிபர், இந்தியா - இலங்கை இடையேயான பொருளாதார ஒத்துழைப்புகள், முதலீடுகளை அதிகரிப்பது, பாதுகாப்பு, சுற்றுலா மற்றும் எரிசக்தி துறையின் முன்னேற்றங்கள் குறித்து அவரிடம் விவாதிக்கப்பட்டதாக இலங்கை அதிபர் தமது சமூகவலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் இந்த பேச்சுவார்த்தைகள் அமைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரும், இலங்கை அதிபரை சந்தித்து பேசினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியாவின் அண்டை நாடுகளுடனான கொள்கை மற்றும் சாகர் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் நடைபெறும் பேச்சுவார்த்தை, இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ளார்.

இலங்கை அதிபராக பதவியேற்ற பின், முதல்முறையாக இந்தியா வந்துள்ள அவர், குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நடப்பாண்டில் இந்தியா – இலங்கை இடையேயான வர்த்தகம் 5 புள்ளி ஐந்து பில்லியன் டாலர் அளவிற்கு உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் தலைவர்களுடனான சந்திப்பை முடித்துக் கொண்டு, பீகாரில் உள்ள புத்தகயாவிற்கு இலங்கை அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே செல்லவுள்ளார்.

>>>>><<<<<

இம்மாதத்தின் கடந்த இரண்டு வாரங்களில் மட்டும், 28 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இந்திய சந்தையில் அந்நிய முதலீடு செயல்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்குச் சந்தையில் 22 ஆயிரத்து 766 கோடி ரூபாயும், கடன் சந்தையில் 4 ஆயிரத்து 814 கோடி ரூபாயும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த செப்டம்பர் மாதம் 57 ஆயிரத்து 724 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு இதுவரை, ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய முதலீடுகள் இந்திய சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே உரையாற்றும் மன் கி பாத் நிகழ்ச்சி இம்மாதம் 29ஆம் தேதி அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாக உள்ளது.

இதில் பங்குபெற விரும்புவோர் தங்களது கருத்துகளை இம்மாதம் 27ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள், Namo செயலி அல்லது mygov தளத்தில் தங்களது கருத்துகளை பகிர்ந்துகொள்ளலாம்.

மேலும் 1800-11-7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும் கருத்துகளை தெரிவிக்கலாம்.

>>>>><<<<<

தென்கொரியாவின் இடைக்கால அதிபர் திரு. Han Duck - Soo நேற்று அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடனுடன், இருநாடுகளின் உறவுகளை வலுப்படுத்தும் விதத்திலான பேச்சுக்கள் தொலைபேசி வாயிலாக நடைபெற்றது.

16 நிமிடங்கள் நீடித்த இந்த தொலைபேசி உரையாடலில், இரு நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்புகள் வலுப்படுத்தப்படும் என்றும் வடகொரியாவால் ஏற்பட்டுள்ள அணுஆயுத அச்சுறுத்தல்களை சமாளிப்பது குறித்தும், ரஷ்யா – வடகொரியா இடையேயான உறவுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ஜனநாயகத்தை பாதுகாப்பதில் தென்கொரியா எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் பாராட்டுக்களை தெரிவித்தார்.

>>>>><<<<<

சிரியாவில் இஸ்ரேல் கைப்பற்றிய Golan Heights பகுதியில் கட்டிட நிர்மானப் பணிகளுக்காக 10 புள்ளி எட்டு ஒன்று மில்லியன் டாலர் நிதியுதவி அளிக்கப்படும் என இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ அறிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் ஏராளமான இஸ்ரேல் மக்கள் வசித்து வருவதாகவும், அவர்களின் எண்ணிக்கையை இருமடங்காக்கும் விதத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதில், மாணவர்களுக்கான கிராமம் மற்றும் புதிய குடியிருப்புகள் அமைக்கப்படுவதுடன், கல்விமுறையை வலுப்படுத்தும் நடவடிக்கைகளும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றின் மீது அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள மயோட்டே தீவில் நேற்று வீசிய சிண்டோ புயலில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

மின்கம்பங்கள், சாலைகள், கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

நிவாரண உதவிகளை பிரான்ஸ் அரசு துரிதப்படுத்தியுள்ளது.

மீட்புப் பணியில் ராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ள.

பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

மத்தியப் பிரதேசத்தில் இன்று கடும் குளிர் மற்றும் குளிர்காற்று வீசக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், ஹிமாச்சரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, உத்தரபிரதேசம், ராஜஸ்தான், ஒடிசா, மத்திய மஹாராஷ்ட்ரா, கட்ச் மற்றும் தெலங்கானா ஆகிய பகுதிகளிலும் கடும் குளிர் நிலவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு நாட்களுக்கு தமிழகம் மற்றும் ஆந்திர கடலோரப்பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளாக அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

பிரிஸ்பனில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 445 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

தொடர்ந்து ஆடிவரும் இந்திய அணி சற்றுமுன்வரை 1 விக்கெட் இழப்புக்கு 6 ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<<

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில், இந்தியா சாம்பியன் பட்டத்தை தக்க வைத்துள்ளது.

மஸ்கட்டில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா – சீனாவை 3-2 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

பெனால்ட்டி கார்னர் முறையில் மூன்று கோல்களை இந்திய கோல்கீப்பர் Nidhi தடுத்து நிறுத்தி, வெற்றியை உறுதி செய்தார்.

வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கு தலா 2 லட்சம் ரூபாய் வழங்கப்படுவதாகவும், குழுவின் உதவியாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படுவதாகவும் ஹாக்கி இந்தியா அமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் முறையாக இந்திய மகளிர் அணி கொரிய அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 49 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளையும், மூன்றாவது மற்றும் இறுதிப்போட்டி வரும் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன.

>>>>>END<<<<<